அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல.22/89(11)

அரசாங்க நிருவாக,மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்-கொழும்பு.7
1992,சனவரி மாதம் 30 ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்,
மாகாண ஆளுநர்களின் செயலாளர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள்,
அரசாங்க அதிபர்கள் அனைவருக்கும்.

<u>பிரசவ லீவு-தாபன விதிக்கோவை அத்தியாயம் XII</u>

1989 மார்சு மாதம் 23ஆந் திகதியிட்ட 22/89ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கைக்கு தங்களுடைய கவனம் கோரப்படுகின்றது.

2. மேலே சொல்லப்பட்ட சுற்றறிக்கையின் 18:6ஆம் பிரிவை நீக்கி அதற்குப் பதிலாக பின்வரும் சொற்களைப் புகுத்துக:

"18:6 - பிரசவ லீவைக் கணக்கிடும் போது அந்த லீவின் காலப்பகுதிக்குள் வருகின்ற அரசாங்க விடுமுறை நாட்களும், சனிக்கிழமைகளும், ஞாயிற்றுக்கிழமைகளும் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படலாகாது. அத்தகைய லீவைக் கணக்கிடுவதில் 12 வாரங்கள் 84 வேலையாற்றும் நாட்களாகவும் 6 கிழமைகள் 42 வேலையாற்றும் நாட்களாகவும் எடுத்துக் கொள்ளப்படலாம்."

ஒப்பம்: ஆர்.அபேரத்ன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக,மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.